(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 64.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 24 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

36/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) கொழும்பு – பதுளை பிரதான வீதியில் பலாங்கொடை, கரித்கல பிரதேசத்தில் ஒரு பகுதி கீழ்நோக்கி புதையுண்டுள்ளது என்பதையும்;

(ii) மேலும், இப்பகுதி இது வரையில் வழமைக்கு கொண்டுவரப்படவில்லை என்பதையும்;

(iii) ஆகையால், இப்பிரதேசத்தில் பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் சாரதிகள் அதிக சிரமங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறெனில், குறிப்பிட்ட வீதியின் இப்பகுதியை வழமைக்கு கொண்டு வருவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

75/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் மூலம் குடிவரவு குடியகல்வு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விமானப் பறப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) விமானக் கம்பனி ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) பெறப்பட்ட வருமானம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நட்டம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த நட்டங்களுக்கான காரணங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

140/ ' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துவண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துவண்டிகளில் போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேருந்துவண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) போக்குவரத்தில் ஈடுபடுத்த தகுதியற்ற நிலையிலுள்ள பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துவண்டிகளை திருத்த அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(v) இ.போ.ச. பேருந்துவண்டிகளின் அணியை வலுப்படுத்துவதற்காக புதிதாக பேருந்து வண்டிகளை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டிருப்பின், அது சம்பந்தமான தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

4.

224/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற நோய்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளில் மேற்படி நோய்களால் பாதிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நோயின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காப்புறுதித் திட்டம் எத்திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இது வரை இக் காப்புறுத்திட்டத்தினால் அனுகூலங்களை பெற்றுக்கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு மாணவரினதும் பெயர், பாடசாலை, கல்வி கற்கின்ற தரம், பீடிக்கப்பட்ட நோய் மற்றும் காப்புறுதித் தொகை ஆகியவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

356/ '18

கௌரவ முஹம்மது நசீர்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வட மாகாணத்தில் மீள்குடியேறிய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

365/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கலபொட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

7.

441/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.09.01 ஆம் திகதியன்றுள்ளவாறு களுத்துறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, அங்கவீனத்தின் தன்மை, பால்நிலை, அங்கவீன நிலைமையானது பிறப்பின் மூலம் ஏற்பட்டதா அல்லது விபத்தின் மூலம் ஏற்பட்டதா என்பனவற்றை வயதின் அடிப்படையில் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அங்கவீனமுற்ற நபரினதும் பெயர், முகவரி, பொறுப்பாளரின் பெயர், கிராம உத்தியோகத்தர் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களின் ஊடாக அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளும் உதவித்தொகையின் அளவு மற்றும் அவர்களின் அங்கவீனத்தின் தன்மை வெவ்வேறாக யாவை யாதென்பதையும்;

(iv) உதவி கிடைக்கவேண்டியிருந்தும் உதவியினைப் பெறாத நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி (IV) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

442/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போ முகாமையாளராக பணியாற்றிய பொறியியலாளர் திரு. எம். கிருஷ்ணராஜா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் அவரை அப்பதவியிலிருந்து நீக்கும் வரை காணப்பட்ட டிப்போவின் நிதி மற்றும் நிர்வாகம் பற்றிய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள டிப்போ முகாமையாளரின் பெயர் மற்றும் அவர் பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழிற்சங்கம் என்பன யாவை என்பதையும்;

(iv) டிப்போ முகாமையாளர் பதவிக்காக பொறியியலாளர் திரு எம். கிருஷ்ணராஜா அவர்களைவிட தற்போது நியமிக்கப்பட்டுள்ள நபர் தகுதி பெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மட்டக்களப்பு டிப்போவின் நிர்வாக நடவடிக்கைகள் தேசிய ஊழியர் சங்கத்தின் தேவைக்காக இடம்பெறுகின்றதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

9.

495/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள மாகாண சபைக்கு சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த நீளம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மாகாண சபை நிதியத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள ஏனைய மாகாண சபை வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

543/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெலிக்கடை, தும்பறை மற்றும் மஹர போன்ற சிறைச்சாலைகளில் மேன்முறையீட்டு நீதிமன்ற சிறைக்கைதிகள் சுமார் 3000 பேர் உள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மத்தியில் தமது குற்றமின்மையை உறுதி செய்து, விடுதலை பெறும் எதிர்பார்ப்புடன் மேல் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடுகளை சமர்ப்பித்துள்ள பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி கோரிக்கைகளில், 10 வருடங்களையும் தாண்டிய மேன்முறையீடுகளும் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வழக்குகளை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) இதற்காகப் பின்பற்றப்படும் நடைமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

554/ ' 19

கௌரவ சி. சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பல விவசாயப் பண்ணைகள் நடாத்தப்பட்டுவருகின்றன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இப் பண்ணைகளில் வேலை செய்வோரின் மொத்த எண்ணிக்கை யாதென்பதனையும்;

(iv) இப் பண்ணைகள் அமைந்துள்ள காணிகளின் அளவு ஏக்கரிலும், அவை எந்தெந்தப் பிரதேசங்களில் உள்ளன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிவில் பாதுகாப்பு பிரிவினரால் நடாத்தப்பட்டு வருகின்ற பண்ணைகளில் வடக்கு மாகாண சபைக்குக் கையளிக்கவேண்டிய பண்ணைகள் இதுவரை கையளிக்கப்படாமைக்கான காரணம் என்னவென்பதனையும்;

(ii) அப் பண்ணைகள் எப்போது வடக்கு மாகாண சபைக்கு கையளிக்கப்படும் என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

594/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு 287 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீழ்ச்சியடைந்துள்ள பங்குச் சந்தை பரிமாற்றல்களை உயர்த்துவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பயனுறுதிமிக்க மாற்றங்கள் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்ட பங்குப் பரிமாற்றல்கள் உயர்வடைந்த அளவினை சம்பந்தப்பட்ட சுட்டெண்களை பயன்படுத்தி தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) 2009 ஆம் ஆண்டின் பின்னர் இற்றைவரை ஒவ்வொரு வருடத்தினதும் பங்குச் சந்தை பரிமாற்றல்களின் அளவு பற்றிய தரவுக் குறிப்பொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யுத்த மோதல்கள் முடிவடைந்த பின்னர் 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் போக்கினை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

632/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் வடக்கு மாகாண சபையினால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை யாது;

(ii) 2017 வாக்காளர் பட்டியலுக்கு ஏற்ப, ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசங்களையும் சார்ந்த வாக்காளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) 2018.01.01 ஆம் திகதியில் ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரதேசங்களினதும் பரப்பளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

684/ '18

கௌரவ கனக ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது வீட்டுத் தேவைப்பாடு உள்ளவர்களாக இருந்தும், வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடன் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டில் வீடமைப்புக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி (i), (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வீடமைப்புக் கடன் வழங்குவதற்கு தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்துகொள்ளும் முறையியல் யாது என்பதையும்;

(ii) இது தொடர்பிலான அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தெரிவு செய்துகொள்ளும் முறையியல் ஊடாக வீடமைப்புத் தேவை கடுமையாக காணப்படுகின்ற அநாதரவான குடும்பங்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

860/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மே மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 6133 குடும்பங்களைச் சேர்ந்த 24,625 நபர்களுக்கு ஏற்பட்ட முழு அளவிலான மற்றும் பகுதியளவிலான சேதங்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான தகவல்களைக் குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தத்தின்போது அனர்த்தத்திற்கு உள்ளான பிரதேசங்களில், அனர்த்தக் காலத்தினுள் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவித்த கூற்றுக்கமைய அமைக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு மே மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் அனர்த்த நிலைமைகளின்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அடங்கலான பிரதிநிதிகள் இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவுடன் நடத்திய கலந்துரையாடலின்போது, அடிக்கடி அனர்த்தங்களுக்கு உள்ளாகும் ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிறுத்தி வைக்க வேண்டிய படகுகளின் எண்ணிக்கை 102 எனக் குறிப்பிட்டுள்ளனரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி படகுகளை வழங்கி அவற்றை உரிய இடங்களில் நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— மக்கள் வங்கி (திருத்தம்),— 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க விடயம் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.30 முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2019 மே 22 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கணும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 4.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 13.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 17.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

19.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.